# கல்லூரி விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும்

1. ஒழுக்கத்தை கடைப்பிடித்தல் வேண்டும்.
2. குறிப்பிட்ட நேரத்திற்குள் கல்லூரிக்கு வரவேண்டும்.
   காலதாமதமாக கல்லூரிக்கு வரக்கூடாது. தூமதமாக வருவது தொடர்ந்து நிகழ்ந்தால் வகுப்பிற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். முற்பகல் அல்லது பிற்பகல் பாடவேளைகளில் ஏதேனும் ஒரு பாடவேளை வராவிட்டாலும் முழுநாள் வராததாகக் கருதப்படும்.
3. விடுப்பு விண்ணப்பமிற்றி விடுப்பு எடுக்ககூடாது. விடுப்பு விண்ணப்பத்தில் பெற்றோர் பாதுகாவலர் கையொப்பம் பெற்றிருக்கவேண்டும். விடுப்பு விண்ணப்பமின்றி விடுப்பு எடுக்க நேர்ந்தால் அடுத்த வேளைநாளில் அதற்குரியக் காரணத்தை குறிப்பிட்டு பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பத்துடன் விடுப்பு விண்ணப்பதை சமர்ப்பிக்க வேண்டும்.
4. கல்லூரி வேளை நேரத்தில் எந்தவொரு மாணவ மாணவியரும் அனுமதியின்றி பார்வையாளர்கள் சந்திக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். பார்வையாளர்கள் தங்களுக்குரிய அடையாள அட்டை இல்லாமல் எந்தெவொரு மாணவ மாணவியரையும் சந்திக்கக் கூடாது,
5. மாணவ மாணவிகள் கல்லூரியில் நடைபெறும் அனைத்து தேர்வுகளிலும் கலந்துக்கொள்ள வேண்டும். மாணவ மாணவிகளுக்கு வைக்கப்படும் தேர்வுகளின் விவரம் அனைத்தும் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு அனுப்பிவைக்கப்படும்.
6. மாணவ மாணவிகள் முழு சீருடையுடன் கல்லூரிக்கு வருகை தரவேண்டும்.
7. அலைப்பேசி, வாக்மேன், விசில், ரேடியோ, பைனாகுலர் மற்றும் கேமரா போன்றப் பொருட்களை வைத்திருக்கக் கூடாது.
8. கல்லூரிக்கு வரும்போது அன்றையப் பாடங்களுக்கான புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள் போன்றவற்றை தவறாமல் கொண்டுவரவேண்டும்.
9. மாணவ மாணவியர் தங்கள் வகுப்புகளை/அறைகளை விட்டு பிற வகுப்புகளுக்கு போகக்கூடாது, மாணவ மாணவியர்களுடைய முன்னேற்றம் அல்லது ஒழுங்கு பிரச்சனை தொடர்பாக பேச அழைக்கும்போது பெற்றோர் அல்லது பாதுகாவலர் குறிப்பிட்ட நேரத்தில் நேரில் வரவேண்டும். வேறு எவரும் அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறு வரத்தவறினால் பெற்றோர் அல்லது பாதுகாவலர் வந்து நிர்வாகத்தை சந்திக்கும் வரையில் அந்த மாணவ மாணவியர் வகுப்பறைக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
10. பிற மாணவ மாணவிகளின் பிரச்சனைகளில் தலையிடக்கூடாது. கல்லூரி வளாகத்திற்குள் மாணவ மாணவியர் எவ்வித சண்டைச் சச்சரவு மற்றும் வாக்குவாதங்களில் ஈடுபடுதல் கூடாது. விடுதியில் தங்கி படிக்கும்

காலத்தில் விடுதியின் ஒழுங்கு கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்பட்டு நடந்துகொள்ளவேண்டும்.

11. கல்லூரி வளாகத்தில் பிறந்த நாள் கொண்டாடுதல், ஒருவருக்கொருவர் பரிசு தருதல் மற்றும் பெறுதல் கூடாது.
12. வகுப்பறையில் போதனைக்கு இடையூறு செய்கின்ற வகையில் எந்தவித நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் அமைதியான முறையில் கவனத்துடன் வகுப்புகளை கவனிக்க வேண்டும். மேஜைமீது அமரக்கூடாது. படிக்கட்டுகளில் உட்காரக்கூடாது. வராண்டாக்களிலும் தண்ணீர் அருந்தும் இடங்களிலும் கூட்டமாய் நிற்பதோ உட்கார்ந்து இருப்பதோ கூடாது.
13. வகுப்பறை, ஆய்வுக்கூடம், நூலகம் ஆகிய இடங்களில் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே இருக்கவேண்டும். அமைதிக்காக்க வேண்டும்.
14. கல்லூரி விடுதியின் உடைமைகளை சரியான முறையில் பயன்படுத்துதல் வேண்டும். சேதாரத்திற்கு அந்தந்த மாணவ மாணவியரே முழுப்பொறுப்பேற்க வேண்டும்.
15. விடுதி மாணவ மாணவியர் தவிர மற்ற மாணவர்களுக்கு தபால்கள், பார்சல்கள், தொலைபேசி அலைப்புகள் போன்றவை கல்லூரிக்கு வரக்கூடாது. மேலும், அவர்களின் தனிப்பட்ட தொடர்புகளுக்கு கல்லூரி முகவரியை எக்காரணம் கொண்டு பயன்படுத்தக்கூடாது.
16. கல்லூரி வளாகத்தில் மட்டுமின்றி கல்லூரிக்கு வெளியேயும் மாணவ மாணவிகள் தங்களது நடத்தையின் மூலம் கல்லூரியின் நற்பெயருக்கும் புகலுக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் நடந்துக்கொள்ளக்கூடாது. அவ்வாறு ஏதேனும் நிகழ்ந்தால் உடனடியாக நிறுவனத்தை விட்டு வெளியேற்றப்படுவார்கள்.
17. விடுதிக் காப்பாளரின் அனுமதியின்றி வெளியே செல்லுதல் கூடாது.